## செப்டம்பர் 2015 மாதத்திற்கான பூச்சி மற்றும் நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு முறைகள்

பொதுவாக தமிழகத்தில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கமானது பொருளாதார சேத நிலைக்குக் குறைவாகவே உள்ளது. ஆதலால், விவசாயிகள் தங்கள் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதல் அறிகுறிகளை விளக்குப் பொறி, மஞ்சள் ஒட்டும் பொறி மற்றும் இனக்கவர்ச்சிப் பொறி வைத்து கண்காணிக்க அறிவுறுத்தப்படுகிறது.

**நெற்பயிர்**

நெல்லில் இலைச்சுருட்டு புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதலை கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கு வயல்களில் விளக்கு பொறி (1 / ஏக்கர்) வைக்க வேண்டும். தேவைப்படின் வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் 10 கிலோ / ஏக்கருக்கு அல்லது பிப்ரோனில் 5 எஸ்.சி. 500 மில்லி / ஏக்கருக்கு பயிர்களில் தெளிக்கவும். நாற்றங்காலில் (20 சென்டுக்கு) இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்த பாஸ்போமிடான் 40 எஸ்.எல். 50 மில்லியினை 20 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்.

குலை நோயானது இலையில் கண்வடிவ புள்ளிகளுடன் நடுப்பகுதி அகன்றும் முனைப்பகுதி குறுகியும் காணப்படும். பெரிய புள்ளிகளானது சாம்பல் நிற நடுப்பகுதியுடன் பழுப்பு நிற ஓரங்களுடன் காணப்படும். இதனை கட்டுப்படுத்த தழைச்சத்தை மேலுரமாக இடுவதை தாமதிக்கவும் அல்லது குறைத்து இடவும். ஹெக்டேருக்கு கார்பன்டாசிம் (50 WP) 500 கிராம் தெளிக்கவும்.

**பருத்தி**

பருத்தி காய்புழுக்களை கட்டுப்படுத்த பருத்தி ஏக்கருக்கு 5 என்ற அளவில் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும். தேவைப்பட்டால் இன்டாக்சாபார்ப் 14.5 எஸ்.சி 200 மிலி / ஏக்கர் (அல்லது) ட்ரைஅசோபாஸ் 40 இ.சி 800 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**நிலக்கடலை**

சிகப்பு கம்பளிப் பூச்சி மற்றும் இலை துளைப்பானின் நடமாட்டத்தை கண்டறிய விளக்குப்பொறி ஏக்கருக்கு ஒன்று வைத்து கண்காணிக்கவும். விளக்கு பொறியில் அந்திப் பூச்சிகள் நடமாட்டம் அதிகமாக இருப்பின் உடனடியாக் டைகுளோர்வாஸ் 76

டபுல்யு எஸ்சி 500 மில்லி / ஏக்கர் அல்லது குளோர்பைர்பாஸ் 20 இ.சி. 500 மில்லி / ஏக்கர் அல்லது பாசலோன் 35 இ.சி. 300 மில்லி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் கட்டுப்பாடு**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான தத்துப்பூச்சி, இலைப்பேன், வெள்ளை ஈ, சுருள் வெள்ளை ஈ மற்றும் மாவு பூச்சியின் சேதம் அதிகமாக வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி 5 / ஏக்கர் வைத்து நடமாட்டத்தை கண்டறியலாம். தேவைப்படின் வேப்பங்கொட்டைச்சாறு 5 சதம் அல்லது மீன் எண்ணெய் சோப் 1 கிலோ 40 லிட்டர் தண்ணிருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தவும்.

**தகவல்**

இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை – 3.